**பதிவு அஞ்சல் ஒப்புகை சான்றுடன்**

நகர் ஊரமைப்புத்துறை
மதுரைமாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரைஉள்ளூர் திட்டக்குழுமப்பகுதி,
உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர் (பொ).அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்- **திரு.அ.விஜயன், பி.இ.,**

ந.க.எண்.2648/2021/மதி2.

நாள்- [illegible].01.2022.

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் - மதுரை மாவட்டம் - மேற்கு வட்டம் - மதுரை மாநகராட்சி - கோச்சடை கிராமம் - (சர்வே எண்கள். 104/1B2) - நகர அளவு எண்.15/1B2 - வார்டு-XXV - பிளாக்-02 -ல் 0.58ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் /திட்ட அனுமதி - வழங்குதல் – குறித்து.

பார்வை:

1) மனுதாரர் திரு.ஜெயக்குமார், மதுரை அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் பெறப்பட்ட நாள். 29.07.2021. (பதிவு எண்.202100701012540, நாள்.21.04.2021).
2) மனுதாரர் திரு.ஜெயக்குமார், மதுரை அவர்கள் கடிதம் நாள்.19.07.2021 (பெறப்பட்ட நாள்.29.07.2021 ,05.10.2021 20.11.2021 01.12.2021 ,13.12.2021 மற்றும் 23.12.2021.)
3) உறுப்பினர் செயலர்(பொ), மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண்.2648/2021/மதி2, நாள்.20.09.2021 ,08.11.2021 , 22.11.2021 மற்றும் 06.12.2021.
4) அரசாணை எண்-18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.தி-(1)துறை, நாள்-04.02.2019 மற்றும் அரசாணை எண்-16,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.தி-(1)துறை, நாள்-31.01.2020.
5) மதுரை உள்ளூர் திட்டக்குழும தீர்மானம் எண்.130/2020, நாள்.29.09.2020.
6) மதுரை உள்ளூர் திட்டக்குழும தீர்மானம் எண்.49/2021, நாள்.04.09.2021.
7) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-4367/2017பிஏ-2, நாள்-06.11.2019 மற்றும் 05.02.2020.
8) நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-4367/2019/TCP2, நாள்-14.08.2021.
9) அரசு கடிதம் எண்.19113/நவ 4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்.30.08.2017.
10) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-13686/2017எல்ஏ-2, நாள்-08.09.2017.
11) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்-12201/2017சிபி, நாள்-28.09.2017.
12) சார்பதிவாளர், அரசரடி சார்பதிவாளகம் மதுரை தெற்கு அவர்களின் கடிதம், ந.க.எண் 207/2021, நாள்.17.11.2021.
13) மனுதாரர் திரு.ஜெயக்குமார், மதுரை என்பவர்களிடமிருந்து தானப்பத்திர அசல் ஆவணங்கள் பெறப்பட்ட நாள்.20.11.2021.

14) உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் உள்ளாட்சி பொது உபயோகம் ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானபத்திர ஆவண எண். 4598/2021 நாள்-16.11.2021. மற்றும் 4597/2021 நாள்-16.11.2021

15) மேற்பார்வைபொறியாளர், தமிழ்நாடுமின் உற்பத்தி மற்றும் பகிர்மானகழகம் அவர்களுக்கு TANGEDCO உபயோகம் ஒப்படைப்பு செய்யப்பட்ட ஆவண எண். 4596/2021 நாள்-16.11.2021. .

16) மனுதாரர் **திரு.ஜெயக்குமார்**, மதுரை என்பவர்களது கடிதம் மற்றும் கட்டணங்கள் செலுத்தப்பட்டு இணைப்புகள் பெறப்பட்ட நாள். 13.12.2021 மற்றும் 23.12.2021.

17) அரசு கடிதம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சென்னை-09, அவர்களின் கடிதம் எண்.8449/நவ4(3)/2020-2, நாள்.-23.09.2020.

18) நகர் ஊரமைப்பு இயக்குநர்(மு.கூ,பொ) சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்-7671/2020/T(2),நாள்-25.09.2020.

19) அரசாணை எண்-181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித் துறை, நாள்-09.12.2020.

20) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-19799/2020/போ நாள்-18.12.2020 மற்றும் 24.12.2020 மற்றும் 08.02.2021.

21) **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்திரவு W.P (MD) No:7382 OF 2020 நாள்.04.08.2020.**

22) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்-11465/2020/GR நாள்-05.01.2021.

*******

<u>உத்தரவு</u>

பார்வை 1 மற்றும் 2-ல் சுட்டிய கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, **பார்வை (21) -ல் கண்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்திரவு W.P (MD) No:7382 OF 2020 நாள்.04.08.2020. -ன்படியும் பார்வை (22)-ல் கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் கடித்தின் படியும்** பார்வை 3-ல் சுட்டிய இவ்வலுலக கடிதம் நாள்.08.11.2021 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. **பார்வை 13-ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை** உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திர ஆவணம் எண். 4598/2021 நாள்-16.11.2021. மற்றும் 4597/2021 நாள்-16.11.2021.-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2) மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு <u>ம.வ/ம.உ.தி.கு.எண். 01/2022</u> என எண்ணிடப்பட்டு. தொழில்நுட்ப அனுமதியும், மேற்படி உத்தேசகுடியிருப்பு மனைப்பிரிவிற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் பிரிவு 49-ன்கீழ் மற்றும் பார்வை(4)-ல் கண்ட அரசாணையின், விதி(4)-ன்படியும் <u>திட்ட அனுமதி எண்.01/2022</u>

என எண்ணிடப்பட்டு, 2 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்:9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனை:**

1. (a) பார்வை 19-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 4-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm drains water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".
2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.
3. பார்வை 09 மற்றும் 10-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

(67)

4. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்படி சிறப்பு நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

<u>இணைப்பு</u>

1) அங்கீகரிக்கப்பட்டமனைப்பிரிவு வரைபடங்கள் - 2
மனைப்பிரிவு நிபந்தனைகள் - 2
2) அசல் தானப்பத்திர ஆவணம் எண். 4597/2021 (13-தாள்கள்.) நாள்.16.11.2021. மற்றும் 4598/2021 (14-தாள்கள்.) நாள்-16.11.2021.

உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர்(பொ),
மாவட்டநகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரைமாவட்டம்.

07/01/2022

பெறுநர்

ஆணையாளர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை மாவட்டம்.

நகல்

1) திரு.ஜெயக்குமார்,
M/S ஜெயபாரத் ஹோம்ஸ் பி.லிட்,
652-A,முதல் மாடி ,80 அடி ரோடு,
அண்ணாசாலை,K.K.நகர்,
மதுரை – 625020.

பத்தி ஒன்று மட்டும்

2) தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை ஒழுங்குமுறைகுழுமம், 1A,முதல் தளம்,காந்தி இர்வின் பிரிட்ஜ் சாலை, எழும்பூர்,சென்னை -600008. (TNRERA)

3) தொழில்நுட்பவைப்பறைக்கு -1 நகல். வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் -1

67

தமிழ்நாடு அரசு
நகர் ஊரமைப்புத்துறை
மதுரை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை உள்ளூர் திட்டக்குழுமப்பகுதி,
மதுரை மாநகராட்சி.

கோப்பு எண்.2648/2021/மதி2. நாள்.04.01.2022

<u>மனைப்பிரிவு ம.வ./ம.உ.தி.கு.எண்.01/2021</u>

<u>மனைப்பிரிவு நிபந்தனைகள்</u>

1) நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.
3) மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.
4) அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.
5) மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பி பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.
6) மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
7) 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

8) மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்பாக சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அதிகாரியை தொடர்பு கொண்டு ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு, முன் ஒப்புதலை, கட்டடத்திற்கு நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

9) அ. மேற்படி மனைப்பிரிவிற்கு, நகர் ஊரமைப்புத் துறையால் திட்ட அனுமதி / இசைவு (Planning Permission / Concurrence) மட்டுமே வழங்கப்படுகிறது என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமை, தொடர்பாக விவகாரங்கள் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிலைய அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்பப்பட வேண்டும். இதில் பொது நிலங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10) மனுதாரர், நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'X4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11) மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission / Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

13) விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வனுமதியின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

## அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவின் ஒதுக்கீடு விபரம்

மதுரை மாவட்டம் - மேற்கு வட்டம் மதுரை மாநகராட்சி - கோச்சடை கிராமம் - (சர்வே எண்கள். 104/1B2) நகர அளவு எண்.15/1B2 - வார்டு-XXV -பிளாக்-02 -ல்

| விவரம் | | பரப்பளவு விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | 2347.18 ச.மீ (அ) 0.58 ஏக்கர் |
| ஒதுக்கிய மனைகள் | - | **16 மனைகள்.** |
| பொது ஒதுக்கீடு<br>மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது. | | ---- |
| 2. உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | - | **753.82 சமீ** |
| 3. உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு | - | **11.52 சமீ (0.72%)** |
| 4. தமிழ்நாடு மின்உற்பத்தி ஒதுக்கீடு | - | **08.74 சமீ (0.55%)** |
| விற்பனைக்குரியவை<br>EWS மனைகளின் பரப்பு மனை எண்கள் | -<br>- | ---- |

**நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019-பிஏ2, நாள்-05.02.2020-ன்படி பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்கான வழிகாட்டி மதிப்பீட்டு தொகையானது (ஒதுக்கீடு பரப்பு 100ச.மீ.-க்கு) 10.12.2021-அன்று மனுதாரரால் செலுத்தப்பட்டது.**

**உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர்(பொ),**
**மாவட்டநகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**மதுரை மாவட்டம்.**

04/01/2022

(75)

**மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர்(திட்டம்) செயல்முறை ஆணை**
**முன்னிலை. திரு.A.அலாவுதீன்,D.C.E.,**

**மதி1/000514/2022** **நாள்: .08.2022**

பொருள் : மனை ஒப்புதல் - மதுரை மாநகராட்சி - மத்திய திட்டம் - மதுரை மேற்கு வட்டம் - மண்டலம் 1 - கோச்சடை கிராமம் - சர்வே எண்கள்: 104/1B2, நகரளவு எண்கள்:15/1B2-ல் 0.58 ஏக்கர் (2347.18 சதுர மீட்டர்) பரப்பு மனைப்பிரிவுற்கு ஒப்புதல் வழங்குவது - சம்பந்தமாக.

பார்வை: 1.தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை [UD4(1)] அரசாணை எண்: 181, நாள்: 09.12.2020.
2.ஆணையாளர் அவர்களின் உத்தரவு ந.க.எண்: மதி1/017412/2017, நாள்: 06.02.2021
3.உறுப்பினர் செயலர், மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் செயல்முறை ஆணை ந.க.எண்: 2648/2021/மதி2- நாள் 04.01.2022.
4.இவ்வலுவலக கடித ந.க.எண்: மதி1/000514/2022, நாள்: 11.01.2022.
5. திரு.ஜெயக்குமார், கட்டணம் செலுத்திய நாள்: 06.04.2022.

***********

மதுரை மாநகராட்சி, - மதுரை மேற்கு வட்டம் - மண்டலம் 1 - கோச்சடை கிராமம் - சர்வே எண்கள்: 104/1B2, நகரளவு எண்கள்:15/1B2-ல் 0.58 ஏக்கர் (2347.18 சதுர மீட்டர்) பரப்பு மனைப்பிரிவுற்கு தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி ம.வ./ம.உ.தி.கு.எண்: **01/2022,** திட்ட அனுமதி எண்: **01/2022** என எண்ணிட்டு பார்வை 3-ல் கண்டுள்ள உத்தரவில் வழங்கியதன் அடிப்படையில் பார்வை: 1 மற்றும் 2-ல் காணும் உத்தரவின் அடிப்படையில் பார்வை 4-ல் கண்டுள்ள இவ்வலுவலக உத்தரவின் படியும் மனைப்பிரிவுற்கு ஒப்புதல் வழங்குவதற்கு கீழ்கண்டவாறு கட்டணம் மதுரை மாநகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | பொருள் | கட்டணம் ₹ | ரசீது எண் |
|---|---|---|---|
| 1 | பூங்கா மற்றும் திறவிடம் வேலி அமைத்தல் | **18,877.00** | 115/500/1/22-23/0000025 நாள்: 06-04-2022 |
| 2 | குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | **65,307.00** | |
| 3 | பாதாள சாக்கடை குழாய் அமைத்தல் | **3,22,262.00** | |
| 4 | தெரு விளக்கு அமைத்தல் | **17,800.00** | |
| 5 | கூராய்வு கட்டணம் (2347.18x1.50) | **3,521.00** | |
| 6 | Administrative Charges (2.5%) | **11,928.00** | |
| 7 | GST 12% | **49,342.00** | 115/500/1/22-23/0000026 நாள்: 06-04-2022 |
| | மொத்தம் | **4,89,037.00** | |

எனவே, பார்வை 3-ல் கண்டுள்ள உத்தரவில் திட்ட அனுமதி ம.வ./ம.உ.தி.கு.எண்: **01/2022** என எண்ணிட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியதன் அடிப்படையில் இம்மாநகராட்சியில் மேற்கண்ட மனைப்பிரிவுற்கு அனுமதி எண்: **1536/2022** என எண்ணிட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேலும் மேற்படி மனைப்பிரிவிற்கு பார்வை 3-ல் கண்டுள்ள உத்தரவில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பொருந்தும் என இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

22.8.22

**செயற்பொறியாளர்(திட்டம்)**
**மதுரை மாநகராட்சி**

பெறுநர்: திரு.ஜெயக்குமார்,
M/s ஜெயபாரத் ஹோம்ஸ் பி.லிட்,
கதவு எண்: 652-A, முதல் மாடி, 80அடி ரோடு,
அண்ணாசாலை, கே.கே.நகர், மதுரை – 625020.

**நகல்:** உறுப்பினர் செயலர், மதுரை உள்ளூர் திட்டக்குழுமம், மதுரை.